www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

QL

# முதல் பருவம் - தொகுத்தறித் தேர்வு - 2024

6 - ஆம் வகுப்பு

## தமிழ்

நேரம் : 2.00 மணி பிரிவு - I மதிப்பெண் : 60

***அ. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.*** 8 × 1 = 8

1. ஏற்றத் தாழ்வற்ற ___________ அமைய வேண்டும்.
   அ) சமூகம் ஆ) நாடு இ) வீடு ஈ) தெரு
2. தாய்மொழியில் படித்தால் ___________ அடையலாம்.
   அ) பன்மை ஆ) மேன்மை இ) பொறுமை ஈ) சிறுமை
3. தொன்மை என்னும் சொல்லின் பொருள் ___________
   அ) புதுமை ஆ) பழமை இ) பெருமை ஈ) சீர்மை
4. வெண்குடை என்னும் சொல்லைப் பிரித்து எழுதுக.
   அ) வெண் + குடை ஆ) வெண்மை + குடை
   இ) வெம் + குடை ஈ) வெம்மை + குடை
5. நண்பர்களுடன் ___________ விளையாடு
   அ) ஒருமித்து ஆ) மாறுபட்டு இ) தனித்து ஈ) பகைத்து
6. மருத்துவம் + துறை என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் __
   அ) மருத்துவம்துறை ஆ) மருத்துவதுறை
   இ) மருந்து துறை ஈ) மருத்துவத்துறை
7. சிட்டுக்குருவி வாழ முடியாத பகுதி ___________
   அ) துருவப் பகுதி ஆ) இமயமலை இ) இந்தியா ஈ) தமிழ்நாடு
8. எளிது என்னும் சொல்லின் எதிர்ச்சொல் ___________
   அ) அரிது ஆ) சிறிது இ) பெரிது ஈ) வறிது

***ஆ. கோடிட்ட இடங்களை நிரப்புக.*** 4 × 1 = 4

9. தமிழில் நமக்கு கிடைத்துள்ள மிகப் பழமையான இலக்கண நூல் ___________
10. பறவைகள் இடம் பெயர்வதற்கு ___________ என்று பெயர்
11. மனிதன் தன் வேலைகளை எளிதாக்க கண்டு பிடித்தவை ___________
12. இரண்டு மாத்திரை அளவுள்ள ஒரெழுத்துச் சொல் ___________

***இ) பொருத்துக*** 4 × 1 = 4

| | | | |
|---|---|---|---|
| 13. | விளைவுக்கு | - | பால் |
| 14. | அறிவுக்கு | - | வேல் |
| 15. | இளமைக்கு | - | நீர் |
| 16. | புலவர்க்கு | - | தோள் |

***ஈ) எவையேனும் 5 வினாக்களுக்கு மட்டும் விடையளி*** 5 × 2 = 10

17. பாரதிதாசன் தமிழுக்கு சூட்டியுள்ள பெயர்கள் யாவை?
18. இயற்கை போற்றத்தக்கது ஏன்?



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

19. காணிநிலம் பாடலில் பாரதியார் வேண்டுவன யாவை?
20. உயிருள்ள உடல் எது?
21. நாளைய மனிதனின் வாழ்வு எவ்வாறு இருக்கும்?
22. பறவைகள் எக்காரணங்களுக்காக இடம் பெயர்கின்றன?
23. தமிழ் எழுத்துகளுக்குரிய மாத்திரை அளவுகளைக் குறிப்பிடுக.

*உ) எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி* **3 × 3 = 9**

24. தமிழ்மொழி இனிய மொழி என்பதற்கான காரணம் தருக.
25. பறவை இனங்கள் அழியாமல் காப்பற்றப்பட நாம் செய்யவேண்டியவைப் பற்றி சிந்தித்து எழுதுக.
26. எந்திர மனிதனின் பயன்களை விளக்குக.
27. உங்களுக்கு தெரிந்த மருத்துவ முறைகள் யாவை?

*ஊ. அடிமாறாமல் எழுதுக* **4 + 2 = 6**

28. "தமிழுக்கும் அமுதென்று" எனத் தொடங்கும் பாடலை எழுதுக.
29. அன்பிலார்......எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

*எ. ஏதேனும் ஒன்றனுக்கு விடையளி.* **1 × 7 = 7**

30. அ) கிழவனும் கடலும் என்னும் படக்கதையை உங்கள் சொந்த நடையில் எழுதுக
*(அல்லது)* ஆ) உங்களுக்கென ஒரு எந்திர மனிதன் இருந்தால் அதை எதற்கெல்லாம் பயன்படுத்துவீர்கள் எனச் சிந்தித்து எழுதுக.

*ஏ) ஏதேனும் ஒன்றனுக்கு விடையளி.* **1 × 7 = 7**

31. விடுப்பு வேண்டி உன் வகுப்பாசிரியருக்கு விடுப்பு விண்ணப்பம் எழுதுக. *(அல்லது)*
32. இயற்கையைக் காப்போம் என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக

*ஐ) அனைத்து வினாக்களுக்கும் விடையளி* **5 × 1 = 5**

33. அடிக்கோடிட்ட சொற்களுக்கு இணையான தமிழ் சொற்களை எழுதுக.
அ) இன்று பல்வேறு துறைகளில் <u>ரோபோ</u> பயன்பாட்டிற்கு வந்துள்ளது.
ஆ) <u>காலிங்பெல்லை</u> அழுத்தினான் கணியன்.
34. *பொருத்தமான சொற்களால் கட்டங்களை நிரப்புக.*
அ) புள் என்பதன் வேறு பெயர் ☐☐☐
ஆ) சரணாலயம் என்பதன் வேறு பெயர் ☐☐☐☐☐
35. *கலைச்சொல் தருக.* அ) TOUCH SCREEN ஆ) SATELITE
36. *கீழ்க்காணும் சொற்களில் உள்ள எழுத்துகளைக் கொண்டு புதிய சொற்களை உருவாக்குக.* அ) கரும்பு ஆ) கவிதை
37. *பொருள் தருக:-* அ) அசதி ஆ) சித்தம்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com